CANADIAN LANGUAGE BENCHMARKS PLACEMENT TEST

# உங்களின் கனேடிய மொழிஅளவு கோள்கள் தகுதித் தேர்வு (CLBPT) மதிப்பீட்டு அறிக்கையை விளங்கிக் கொள்ளல்

## கனேடிய மொழி அளவு கோள்கள் தகுதித் தேர்வு (CLBPT)என்பது என்ன?

எந்த அளவு நன்றாக நீங்கள் ஆங்கிலம் பாவிக்கிறீர்கள் என்பதை மதிப்பீடு செய்வதற்கு கனடா மொழி அளவு கோள்கள் (CLB) பயன்படுத்தப்படுகின்றது.

## அளவு கோள்கள் என்றால் என்ன?

கனடா மொழி அளவு கோள்கள் (CLB) என்பது கேட்டல், உரையாடுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை விவரிக்கும் 12 மட்டங்களிலான ஒரு (அளவு கோள்) முறையாகும். CLBPT உங்களின் ஆங்கிலம் பாவிக்கும் ஆற்றலை CLB ஒன்றிலிருந்து எட்டு வரையிலான முதல் எட்டு அளவு கோள்களுக்கு அளவீடு செய்கிறது.

| கனடா மொழி அளவு கோள்கள் (CLB) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டம் 1 அடிப்படைத் தேர்ச்சி | | | | கட்டம் II இடைநிலைத் தேர்ச்சி | | | | கட்டம் III உயர்நிலைத் தேர்ச்சி | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

CLBPT CLB 1 இலிருந்து 8 வரையிலான மட்டங்களை அளவீடு செய்கிறது

## எனது CLBPT பெறுபேறுகளின் அர்த்தம் என்ன?

கீழே காணப்படும் படிவம் உங்களின் CLBPT பெறுபேறுகளை விவரித்துக் காட்டுகிறது. உங்கள் அளவுகோளைத் தெரிந்து கொள்ள இடது பக்கத்திலுள்ள படிவத்தினைப் பாருங்கள்.பிறகு, உங்களின் அளவுகோள் மட்டத்தினைத் தெரிந்து கொள்வதற்காக குறிப்பிட்ட திறனின் கீழ் (கேட்டல்,உரையாடுதல்,வாசித்தல் அல்லது எழுதுதல்) பாருங்கள். ஒவ்வொரு திறனுக்கும் உங்கள் புள்ளிகள் வித்தியாசமாக இருக்கலாம்; இது வழக்கமானதுதான். சிலர் கேட்டலில் அல்லது உரையாடலில் பலமானவர்களாக இருப்பர். மற்றோர் எழுதுவதில் அல்லது வாசிப்பதில் பலமானவர்களாக இருப்பர்.

| CLB கேட்டல் | | CLB உரையாடுதல் | | CLB வாசித்தல் | | CLB எழுதுதல் | |
|---|---|---|---|---|---|---|---|
| CLB-யை முந்திய | ஆங்கிலம் உங்களுக்கு புரியாது | CLB-யை முந்திய | நீங்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதில்லை | CLB-யை முந்திய | நீங்கள் ஆங்கிலம் வாசிப்பதில்லை அத்துடன் ஆங்கில அகரவரிசையில் பரிச்சயமற்றிருக்கலாம் | CLB-யை முந்திய | நீங்கள் ஆங்கிலம் எழுதுவதில்லை ஆனால் எழுத்துக்களை அல்லது இலக்கங்களை பிரதிபண்ணக் கூடியவராக இருக்கலாம் |

**கட்டம் 1: அடிப்படைத் தேர்ச்சி**

| CLB கேட்டல் | | CLB உரையாடுதல் | | CLB வாசித்தல் | | CLB எழுதுதல் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நீங்கள் சில சாதாரண, மற்றும் பரிச்சயமான சில சொற்களை விளங்கிக் கொள்வீர்கள். மக்கள் உங்களுக்கு முகமன் கூறும் போது நீங்களும் முகமன் கூறுவீர்கள். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள உங்களுக்கு அதிகம் உதவி தேவைப்படும். | 1 | நீங்கள் மக்களுக்கு முகமன் கூறுவீர்கள் அத்தோடு உங்களைப் பற்றிய சில சாதாரண தகவல்களையும் கொடுப்பீர்கள். நீங்கள் சில சொற்களை மட்டும் பாவிப்பீர்கள். நீங்கள் உரையாடும்போது உங்களுக்கு உதவி தேவை. | 1 | நீங்கள் படங்களின் உதவியோடு அரிசுவடி மற்றும் பொதுவான சாதாரண சொற்களை வாசிப்பீர்கள். | 1 | நீங்கள் சொற்கள் மற்றும் இலக்கங்களை பிரதி பண்ணுவீர்கள். உங்களால் சில சொற்களை எழுத முடியும். |
| 2 | எளிதானதும் பரிச்சயமானதுமான சொற்கள்,சொற்றொடர்கள் மற்றும் வாக்கியங்கள் உங்களுக்கு விளங்கும். உங்களைப் பற்றிய அடிப்படைக் கேள்விகள் உங்களுக்கு விளங்கும். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ள உங்களுக்கு உதவி தேவைப்படும். | 2 | நீங்கள் மக்களுக்கு முகமன் கூறுவீர்கள் அத்தோடு உங்களைப் பற்றிய சில சாதாரண தகவல்களையும் கொடுப்பீர்கள். குறுகிய வசனங்களில் நீங்கள் உரையாடுவீர்கள். பல சமயங்களில் உங்களுக்குத் தேவையான சொற்கள் உங்களுக்குத் தெரிந்திருக்காது. ஆதனால் நீங்கள் உரையாடும் போது உங்களுக்கு ஓரளவு உதவி தேவைப்படுகின்றது.. | 2 | நீங்கள் அரிச்சுவடி, சாதாரண சொற்கள் மற்றும் மிகச் சாதாரணமான நாளாந்த வாழ்வு பற்றிய வசனங்களை வாசிப்பீர்கள். நீங்கள் படங்களை உங்களுக்கு உதவியாக பாவிப்பீர்கள். | 2 | நீங்கள் சொற்கள் மற்றும் இலக்கங்களைச் சரியாக பிரதி பண்ணுவீர்கள். உங்களைப் பற்றிய சில சாதாரண குறுகிய வசனங்களை உங்களால் எழுத முடியும். |
| 3 | நாளாந்த விடயங்கள் சம்பந்தமான குறுகிய வசனங்களை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். உங்களைப் பற்றிய சாதாரண கேள்விகள், மற்றும் பரிச்சயமான விடயங்கள் சம்பந்தமான சில சாதாரண கேள்விகளையும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். சில நேரங்களில் மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள உங்களுக்கு உதவி தேவைப்படும். | 3 | நீங்கள் பரிச்சயமான நாளாந்த விடயங்களைப் பற்றி சில சாதாரண வசனங்களை சொல்வீர்கள். உங்களைப் பற்றிய சாராரண கேள்விகளுக்கு தனிச் சொல்லால் அல்லது குறுகிய வசனம் மூலமாக பதில் சொல்வீர்கள். ஆனால் சில நேரங்களில் உரையாடும் போது இன்னும் உதவி தேவைப் படுகிறது. | 3 | சாதாரணமான நாளாந்த சொற்களை நீங்கள் வாசித்து விளங்கிக் கொள்வீர்கள். அத்தோடு நீங்கள் அன்றாட நிகழ்வுகள் சம்பந்தமான சாதாரண சிறு கதைகள் மூலம் சில அடிப்படைத் தகவல்களை விளங்கிக் கொள்வீர்கள். உங்களுக்கு உதவ படங்களைப் பாவிப்பீர்கள். | 3 | உங்களைப் பற்றியும், பரிச்சயமான ஒரு இடம் அல்லது உங்கள் குடும்பம் போன்ற நீங்கள் நன்றாக அறிந்த ஒன்றைப் பற்றியும் குறுகிய சாதாரண வசனங்களை உங்களால் எழுத முடியும். |
| 4 | பரிச்சயமான, நாளாந்த விடயங்கள் சம்பந்தமான சாதாரண கேள்விகள் மற்றும் தகவல்களை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். தங்களின் விருப்பு, வெறுப்புகளைப் பற்றி யாராவது கதைத்தால் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள மட்டும் உங்களுக்கு சிறிது உதவி தேவைப்படும். | 4 | நீங்கள் நாளாந்த உரையாடலில் பங்கு கொள்வதோடு உங்கள் சொந்த அனுபவங்களை விபரிப்பீர்கள். நீங்கள் குறுகிய வசனங்களைப் பாவிக்கிறீர்கள். உங்களின் விருப்பத் தேர்வுகள், விருப்பு வெறுப்புகளைப் பற்றிக் கதைப்பீர்கள். நீங்கள் உரையாடும் போது அதிகம் உதவி தேவைப்படாது. | 4 | நீங்கள் பல பரிச்சயமான சொற்களையும், வசனங்களையும் வாசிப்பீர்கள். பரிச்சயமான விடயங்கள் சம்பந்தமான சாதாரண கதைகளை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். குறைந்த பரிச்சயமுள்ள விடயங்கள் சம்பந்தமான நீண்ட விவரித்தல் ஊடாகவும் நீங்கள் தகவலகள் பெற்றுக் கொள்ளலாம். | 4 | ஒரு சொந்த அனுபவம் பற்றி அல்லது பரிச்சயமான ஒரு விடயம் பற்றி ஒரு பந்தியை எழுதுவதற்கு நீங்கள் குறுகிய சதாரண வசனங்களைப் பாவிப்பீர்கள். |

மேலதிக விபரங்களுக்கு, வருக: www.language.ca

TAMIL

CANADIAN LANGUAGE BENCHMARKS PLACEMENT TEST

# உங்களின் கனேடிய மொழிஅளவு கோள்கள் தகுதித் தேர்வு (CLBPT) மதிப்பீட்டு அறிக்கையை விளங்கிக் கொள்ளல்

## கட்டம் II: இடைநிலைத் தேர்ச்சி

| | CLB கேட்டல் | CLB உரையாடுதல் | CLB வாசித்தல் | CLB எழுதுதல் |
|---|---|---|---|---|
| 5 | பரிச்சயமான விடயங்கள் சம்பந்தமாக சாதாரண வேகத்தில் சொல்லப்படும் பல சொற்கள் மற்றும் சொற்றொடர்களை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். மக்கள் பரிச்சயமான விடயங்களைப் பற்றிக் கதைக்கும்போது வரும் சில மறைமுகமான அர்த்தங்களையும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். உங்களுடன் யாரும் உரையாடும் போது விளங்கிக் கொள்ள வழமையான உதவி தேவைப்படாது. ஆனால், சில நேரங்களில் அவர்கள் சொல்வதை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்வீர்கள். | உங்களின் சொந்த அனுபவங்கள் சம்பந்தமாக கதைப்பதோடு சுதந்திரமாக உங்கள் விருப்பு வெறுப்புகளை விவரித்துக் கூறுவீர்கள். நீங்கள் நீண்ட வசனங்களைப் பாவிக்கவும் ஆலோசனைகள் ஒப்பீடுகள் வழங்கவும் ஆரம்பித்துள்ளீர்கள். உங்களுக்கு பல பொது சொற்களும் சில மரபுச் சொற்றொடர்களும் தெரிந்திருக்கிறது. சில நேரங்களில் நீங்கள் தயங்குவதோடு இடை நிறுத்துகிறீர்கள். சில சந்தர்ப்பங்களில் மக்களுக்கு நீங்கள் உரையாடும் போது உங்களை விளங்கிக் கொள்வது கடினமாக இருக்கும். | பரிச்சயமான மற்றும் பல பரிச்சயமில்லாத சொற்கள் உங்களுக்கு விளங்குகின்றன. ஓரளவு பரிச்சயமான விடயங்கள் விவரிக்கும் போது பிரதான கருத்துக்கள், சில விபரங்கள் மற்றும் சில மறைமுகமான அர்த்தங்களையும் நீங்கள் விளங்கிக் கொள்கிறீர்கள். நீங்கள் நீண்ட அதிகம் கடினமான உரைகளில் இருந்து தகவல்களை அறிந்து கொள்கிறீர்கள். | நீங்கள் ஒரு நிகழ்வை ஒரு பிரதான கருத்துடனும் அனுசரனையான விபரங்களுடனும் ஒரு பந்தியில் விபரிப்பீர்கள். நீங்கள் உங்கள் கருத்துக்களை விவரமாக விளக்குவீர்கள் அல்லது உங்கள் கருத்தைத் தெரிவிப்பீர்கள். சிறு தவறுகள் இருந்தாலும் உங்களுடைய வசனங்கள் இலக்கணம், எழுத்துக் கோர்வை மற்றும் சொல்லகராதியின் நல்ல அம்சங்களைக் காட்டுகின்றன. |
| 6 | நீங்கள் பல பொதுவான சொற்கள், சில குறைந்தளவு பரிச்சயமானவைகள் மற்றும் சில மரபுச் சொற்றொடர்களை விளங்கிக் கொள்வீர்கள். யாராவது பரிச்சயமான விடயத்தைப் பற்றிப் பேசும்போது மறைமுகமான அர்த்தங்களையும், முக்கியமான விபரங்களையும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். கதைப்பவரின் மனப்பாங்கு மற்றும் கருத்துக்கள் சம்பந்தமான சில விபரங்களை நீங்கள் அடையாளம் காண்பீர்கள். உங்களுடன் யாரும் உரையாடும் போது அவர்களை விளங்கிக் கொள்வதில் உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. | உண்மைகள் எண்ணங்கள் பற்றி ஓரளவு விரிவாக நீங்கள் கதைப்பீர்கள். நீங்கள் வெவ்வேறான இலக்கண அமைப்புகளைப் பாவித்து உங்கள் கருத்துக்களை நீண்ட வசனங்கள் மூலமாக இணைப்பீர்கள். நீங்கள் சில மரபுச் சொற்றொடர்களைப் பாவிப்பதோடு உங்களின் சொல்வளம் வளர்ச்சியடைந்திருக்கிறது. நீங்கள் சில பிழைகள் விட்டாலும் சாதாரணமாக மக்கள் உங்களை விளங்கிக் கொள்வதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. நீங்கள் ஓரளவு நன்றாக சரளமாகக் கதைக்கிறீர்கள். | சாதாரண ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சில ஓரளவு கடினமான குறுகிய உரைகளை நீங்கள் விளங்கிக் கொள்கிறீர்கள். பிரதான கருத்துக்கள், முக்கிய விபரங்கள் மற்றும் சில மறைமுகமான அர்த்தங்களையும் நீங்கள் விளங்கிக் கொள்கிறீர்கள். எழுதுபவரின் நோக்கம், அபிப்பிராயம் மற்றும் உளப்பாங்கை நீங்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறீர்கள். நீண்ட, மிகவும் கடினமான உரைகளிலிருந்து பிரதான கருத்துக்களையும், விபரங்களையும் நீங்கள் விளங்கிக் கொள்கிறீர்கள். | நீங்கள் நிகழ்வுகள், மக்கள், இடங்கள், பொருட்கள் மற்றும் நடைமுறைகளை ஒரு பந்தி உருவில் விபரிப்பீர்கள் அல்லது ஒப்பீடு செய்வீர்கள். நீங்கள் ஒரு கருத்தை அல்லது எண்ணத்தைத் தெளிவாக வெளிப்படுத்துவதோடு அதற்கு ஆதரவாக சில விபரங்களையும் உள்ளடக்குவீர்கள். உங்கள் சாதாரண வசனங்களில் எழுத்துக் கோர்வை, குறிகள் மற்றும் சொல்லகராதியில் சில தவறுகள் மட்டுமே இருக்கும். நீங்கள் உயர்தர இலக்கணத்தையும் சொல்லகராதியையும் பாவிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். |
| 7 | சொந்த அனுபவங்கள், பரிச்சயமான விடயங்கள் மற்றும் பொது அறிவு சம்பந்தமான மிகக் கடினமான மறைமுகமான கேள்விகள் உங்களுக்கு விளங்கும். யாராவது பல சுருக்கமான எண்ணங்களைப் பற்றிக் கதைக்கும் போது பிரதானமான கருத்துகள், முக்கியமான விபரங்கள், மறைமுகமான அர்த்தங்களை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். உங்களின் சொல்லகராதி விரிவடைந்துள்ளதோடு நீங்கள் அதிகமான மரபுச் சொற்றொடர்களையும் அறிந்திருக்கிறீர்கள். பரிச்சயமான விடயங்களைப் பற்றிய உரையாடல்களை விளங்கிக் கொள்வதில் உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. | பல வித்தியாசமான தலைப்புகள் சம்பந்தமாக நீங்கள் நன்றாகக் கதைக்ககிறீர்கள். நீங்கள் மக்கள் மற்றும் இடங்கள் நிலைமைளை விவரித்து பேசுவதுடன் ஒரு விடயம் சம்பந்தமாக உங்கள் கருத்துக்கள் உணர்வுகள் மற்றும் தயக்கங்களையும் வெளிப்படுத்துகின்றீர்கள். நீங்கள் விபரமான ஒப்பீடுகளும் செய்கின்றீர்கள். பல மரபுச் சொற்றொடர்களை உள்ளடக்கிய உயர்தர சொல்லகராதியைப் பாவிக்கிறீர்கள். நீங்கள் சில இலக்கணப் பிழைகளுடன் கதைத்தாலும் மக்கள் உங்களை இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. நீங்கள் ஓரளவு நன்றாக சரளமாகக் கதைக்கிறீர்கள். | சிறிது கடினமான நீண்ட சாதாரண ஆங்கிலத்தில் எழுதப்பட்ட உரைகளை நீங்கள் விளங்கிக் கொள்கிறீர்கள். உரையிலிருக்கும் பல தரப்பட்ட கருத்துக்களை நீங்கள் தேடி ஒருங்கிணைக்கிறீர்கள் அல்லது வேறுபாடுகளைக் கண்டு ஒப்பீடு செய்கிறீர்கள். உண்மைகள், கருத்துக்கள் மற்றும் உணர்வுகள் சம்பந்தமாகக் கூறும் உரைகள் உங்களுக்கு விளங்கும். நீண்ட மிகவும் கடினமான உரைகளிலிருந்து பிரதான கருத்துக்களையும் சில விபரங்களையும் நீங்கள் விளங்கிக் கொள்கிறீர்கள். | நீங்கள் பரிச்சயமான, திட்டவட்டமான தலைப்புகளைப் பற்றி சுருக்கமான பந்திகளை எழுதுவதோடு தெளிவான பிரதான கருத்துக்களையும் அனுசரனையான சில விபரங்களையும் உள்ளடக்குவீர்கள். உங்களுக்குப் பொருத்தமான ஒரு முன்னுரையுடனும் முடிவுரையுடனும் சுருக்கமான ஒரு கட்டுரை எழுத முடியும். உங்களால் சொல்லகராதி, இலக்கணம் மற்றும் வசன அமைப்பில் நல்ல அம்சங்களைக் காட்ட முடியும். நீங்கள் உயர்தர சொல்லகராதியையும், இலக்கணத்தையும் பாவிப்பீர்கள், ஆனால் சில நேரங்களில் உங்களின் வசனங்கள் வழமைக்கு மாறானதாகவும் தடுமாற்றமாகவும் |
| 8 | சொந்த அனுபவங்கள், பரிச்சயமான விடயங்கள் மற்றும் பொது அறிவு சம்பந்தமான மிகக் கடினமான மறைமுகமான கேள்விகள் உங்களுக்கு விளங்கும். மற்றவர்கள் சுருக்கமானதும் சிக்கலானதுமான சிந்தனைகள் மற்றும் பரிச்சயமான விடயங்கள் பற்றி கதைக்கும் போது பிரதான கருத்துக்கள், நோக்கம் மற்றும் மனப்பாங்கையும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். உங்களுக்கு மரபுச் சொற்றொடர்கள் மற்றும் தெரிவிப்புகள் விளங்குவதோடு பொதுவான விளக்கமான கதைகள் உரையாடுதல்களையும் விளங்கிக் கொள்ள முடியும். | பரிச்சயமான மற்றும் அதிக பரிச்சயமுள்ள பல வகையான விடயங்களைப் பற்றி நீங்கள் நம்பிக்கையுடன் கதைக்கிறீர்கள். நீங்கள் விரிவாகச் சொலவதுடன் கருத்துக்களை வெளிப்படுத்தி விளக்கங்களும் சொல்கிறீர்கள். ஒரு பிரச்சினைக்கு தீர்வொன்றினை பரிந்துரை செய்வதற்காக நீங்கள் தகவல்களை பகுப்பாய்வு செய்து ஒப்பீடும் செய்கின்றீர்கள். நீங்கள் மரபுச் சொற்றொடர்களுடன் கூடிய உயர்தர சொல்லகராதியைப் பாவிக்கிறீர்கள். தவறுகளினால் தடங்கள் ஏற்படுத்தாத தெளிவானதாக உங்கள் செய்திகள் விளங்கிக் கொள்ளாத நிலைமை மிக அரிதாகவே இருக்கிறது. நீங்கள் நன்றாக சரளமாகக் கதைக்கிறீர்கள். | சாதாரணமான ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஓரளவு கடினமான நீண்ட உரைகளிலுள்ள பிரதான கருத்துக்கள், வார்த்தை மற்றும் முக்கியமான விபரங்களை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். பந்திகளின் ஊடாக தகவல்களைக் கண்டறிந்து ஒன்று சேர்ப்பீர்கள். சுருக்கமானதும் தத்துவ ரீதியானதுமான தலைப்புள்ள உரைகளில் எழுதுபவரின் நோக்கம் மற்றும் மறைமுகமான அர்த்தங்களை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். சில நேரங்களில் மிக உயர்தரமான உரைகளிலுள்ள சில மரபுச் சொற்றொடர்கள் அல்லது கலாசார கொள்வது மிக்க கடினமாக இருக்கலாம். | நீங்கள் பரிச்சயமான அல்லது நுண்மமான தலைப்புகள் பற்றி சுருக்கமான பந்திகளில் உங்கள் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் ஒரு குறுகிய கட்டுரையில் வசனங்களை இணைத்து பிரதான கருத்துக்கு அனுசரனையும் தருவீர்கள். நீங்கள் பொதுவான வசன அமைப்பு, இலக்கணம் மற்றும் எழுத்துக் கோர்வையைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்லகராதியையும் பாவிப்பீர்கள். சமயங்களில் சிக்கலான இலக்கண நடைமுறை உங்களுக்குச் சிரமமாக இருக்கும். ஆனால், உங்கள் செய்தி விளங்குவதற்கு இலகுவானதாக இருக்கும். |

**மேலதிக விபரங்களுக்கு, வருக: www.language.ca**

Centre for Canadian Language Benchmarks

Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

Ontario